**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : "அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்**
**பொல்லாத சூழக் கெடும் "**

**பொருள் :** அருளை விரும்பி அறநெறியில் நின்றவனும், பிறர் பொருளை கவர விரும்பி தீயவற்றை எண்ணினால் கெட்டுப்போவான். துறவிகளும் மனத்தாலும் பிறர் பொருளை விரும்பக்கூடாது.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.2 /39182/ 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 17.8.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :117**
**பதிவு செய்யப்பட்டது.**

**மேயர் அவர்களின் தீர்மானம்**
**மாமன்ற தீர்மானம் எண் :118**

சேதுசமுத்திர திட்டப்பணியை நிறைவேற்றினால் தமிழகத்திற்கு பொருளாதார ரீதியில் பெரிதும் பயனளிக்கும். இந்த சேதுசமுத்திர திட்டப்பணியை கொண்டு வருவதற்கு மூலகாரணமாக இருந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த திட்டப் பணியை முடக்கும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, தரக்குறைவான வார்த்தைகளால் இழிவுபடுத்தி பேசிய, முன்னாள்

பாராளுமன்ற உறுப்பினர் ராம்விலாஸ் வேதாந்தி அவர்களை இம்மாமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், சேதுசமுத்திரத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்தி இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**மேயர் அவர்களின் தீர்மானம்**

**மாமன்ற தீர்மானம் எண் :119**

இந்திய நாட்டின் விடுதலைக்காக அல்லும், முகலும் அயராது பாடுபட்டு, தேசியத்தையும், தமிழையும் தனது இரு கண்களாகப் பாவித்து, கவிதை பாடியவர் மகாகவி பாரதியார். தமிழுணர்வு பெண்கள் முன்னேற்றம் சமுதாயச் சீர்கேடு, நாட்டுப்பற்று என மக்கள் மத்தியில், உயர்ந்த கருத்துக்களை பதிய வைத்தவர் முண்டாசுக் கவிஞர் பாரதியாவார். எனவே பார்போற்றும் பாரதியின் புகழை, நிலைநாட்டும் வகையில், அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி நுழைவாயில் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள இடத்தில், மகாகவி பாரதியாரின் திருஉருவச் சிலையை நிறுவ, அனுமதி வழங்க அரசை கேட்டுக் கொள்ள இம்மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**மேயர் அவர்களின் தீர்மானம்**

**மாமன்ற தீர்மானம் எண் :120**

மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட பின்பு, முதல் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழக மக்களால் முத்தண்ணன் என்று அன்போடு அழைக்கப்பட்ட முன்னாள் மேயர் திரு. எஸ். முத்து அவர்கள் திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராகவும், மக்களுக்கு சேவை செய்வதில் தனக்கென ஒரு முத்திரையை பதித்தவர். இவர் மதுரை நகராட்சி மற்றும் மாநகராட்சியில் சேர்மன் மற்றும் மேயராக இருந்தபோது, சாதி, மத வேறுபாடின்றி, அனைத்து மக்களோடும் நட்பு கொண்டிருந்தவர். மதுரை முத்து கழகத்தின் சொத்து என, பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்டவர். தமிழக மக்கள் மத்தியில் குறிப்பாக மதுரை மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்றுள்ள முன்னாள் மேயர் திரு. எஸ். முத்து அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை அலுவலக வளாகத்தில், அவர்களது திருஉருவச் சிலையை நிறுவ அனுமதி வழங்க அரசை கேட்டுக் கொள்ள இம்மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**மேயர் அவர்களின் தீர்மானம்**

**மாமன்ற தீர்மானம் எண் :121**

உலக தமிழனத் தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின், 50 ஆண்டுகால பொதுப்பணி சேவைக்கான பொன்விழா வளைவு, இராணிமங்கம்மாள் சத்திரம் முன்புறம் இருபாதை வளைவு அமைக்க, தெற்கு மண்டலத் தலைவர் திரு.மாணிக்கம் அவர்கள் முன்மொழிந்ததை, இந்த மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

## 2) மதி.1/30403/ 07

மதுரை மாநகராட்சி வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராம் T.S.No.23/2, (ச.எண். 54/2) நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான பாட்டை புறம்புகலில் திரு.ஜோசப் அலங்கார் ராஜ்–1, திருமதி.டெய்சிராணி–2 மற்றும் திருமதி. குழந்தைதெரஸ் ஆகிய மூவரும் தலா ஒரு செண்ட் இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றும், இந்த மூன்று நபர்களும் அரசாணை (நிலை) எண்.854 / 30.12.2006ன் படி ஒப்படை கோரியுள்ளதாகவும், அதற்கான கால கிரையம் செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு ஸ்தலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட என்பதாலும், நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான பாட்டை புறம்புகலில் என்பதாலும், ஒப்படை வாங்கும் பட்சத்தில் மாநகராட்சியின் ஆட்சேபணையில்லா சான்றினை அனுப்பி வைக்கக் கோரிய வடக்கு வட்டாட்சியரின் 25.5.2007ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, மேற்கண்ட இடத்தை மதுரை மேற்கு நெடுஞ்சாலை துறையினர் ஆய்வு செய்ததில், மேற்படி இடம் மதுரை அழகர்கோவில் சாலை கி.மீ. 7/8-ல் இடதுபுறம் அமைந்துள்ளதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு சாலையின் போக்குவரத்திற்கு இடையூறு அமையாத வகையில் உள்ளதாகவும், அரசு விதிகளுக்கு உட்பட்டு பட்டா வழங்க சிபாரிசு செய்வதாக மதுரை நெடுஞ்சாலை கோட்டப்பொறியாளரின் 21.8.2007ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட இடத்திற்கு பட்டா வழங்குவதற்கு மாநகராட்சியின் ஆட்சேபனையில்லா சான்றினை வழங்குவது குறித்து மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :122**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 3) சி.டபிள்யூ.2 / 4395 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 17.8.2007ம் தேதி நடைபெற்ற கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :123**
**பதிவு செய்யப்பட்டது.**

## 4) சி.டபிள்யூ.3 / 39181 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 20.8.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :124**
**பதிவு செய்யப்பட்டது.**

## 5) சி.டபிள்யூ.3 / 1436 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 21.8.2007ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :125**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6) சி.டபிள்யூ.2 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 22.8.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :126**
**பதிவு செய்யப்பட்டது.**

## 7) சி.டபிள்யூ.3 / 0883 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 12.9.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :127**
**பதிவு செய்யப்பட்டது.**

## 8) சி.டபிள்யூ.1/25553/2007

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மேயர்கள் / தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியை கீழ்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | பதவி | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ரூபாய் | அரசு ஆணையின்படி தற்போது உயர்த்தப்பட்டுள்ள அமர்வுப்படி ரூபாய். |
|---|---|---|---|
| மாநகராட்சிகள் | மேயர் மற்றும் உறுப்பினர்கள் | ரூ.550/- | ரூ.800/- |
| நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | ரூ.330/- | ரூ.600/- |
| மூன்றாம் நிலை நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | ரூ.165/- | ரூ.500/- |
| பேரூராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | ரூ.150/- | ரூ.300/- |

மேற்கண்டவாறு மதுரை மாநகராட்சி மேயர் மற்றும் உறுப்பினர்கள் அமர்வுப்படியை ரூ.550– லிருந்து ரூ.800– ஆக உயர்த்தி வழங்கி வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 26–6–2007ம் தேதிய (இருபதாண்டு) 104 எண்ணுள்ள அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்தும் தலைவர் மற்றும் துணைத்தலைவர்களுக்கு அமர்வுப்படி வழங்கப்படமாட்டாது என அரசாணையில் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆணைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :128**
**பதிவு செய்யப்பட்டது.**

## 9) ம.நி.1/18107 /2006

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டப் பணிகளுக்கு அரசு ஆணை எண். 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.6.2007–ன்படி, 2 செயற்பொறியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதில், ஒரு செயற்பொறியாளர் பணியிடத்தை தகுதியுள்ள மாநகராட்சி உதவி செயற்பொறியாளரைக் கொண்டு பணி உயர்வு மூலம் நிரப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஏ. மதுரம், உதவி செயற்பொறியாளராக, மதுரை மாநகராட்சிப் பணியில் கடந்த 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார். மேலும் அன்னார் கடந்த ஓராண்டு காலமாக ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டப்பணிகளுக்கான நிர்வாகப் பொறியாளராக பொறுப்பு பணி பார்த்து வந்தார். எனவே ஜவஹர்லால் நேரு தேசியநகர் புனரமைப்புத் திட்டப்பணி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு திரு. ஏ. மதுரம், உதவி செயற்பொறியாளரை செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்க மநி.1/18107/2006, நாள் : 10.7.2007 கடிதத்தின்படி அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், திரு. ஏ. மதுரம் உதவி செயற்பொறியாளரை ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டப் பணிகளுக்கு செயற்பொறியாளராக ரூ.10,000-325-15,200/- என்ற ஊதிய விகிதத்தில் பணி உயர்வு செய்து அரசாணை எண்.330, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 23.7.2007ல் பிறப்பிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :129**
**பதிவு செய்யப்பட்டது.**

## 10) ம.தி.2/12924/ 07

முன்னாள் மதுரை பாராளுமன்ற உறுப்பினரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான அமரர் திரு. பி.ராமமூர்த்தி அவர்களின் திருவுருவச்சிலை நிறுவ இந்திய தொழிற்சங்க மையத்தின் மதுரை மாவட்ட குழு அனுமதி கோரியதன் பேரில் மாமன்றத் தீர்மானம் எண். 36, நாள் : 25.4.2007–ல் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டதில் அரசாணை (நிலை) எண். 117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள் : 21.8.2007–ல் அமரர் திரு.பி.ராமமூர்த்தி அவர்களின் திருவுருவச் சிலையை மதுரை கிழக்கு உள்வட்டம், ஐராவதநல்லூர் கிராமம் தியாகராசர் கல்லூரி ஆரம்பிக்கும் இடத்திற்கு முன்பாகவும் அனுப்பானடி செல்லும் பிரிவுச்சாலையின் தொடக்கப்பகுதி முன்பாகவும் அமைந்துள்ள மாநகராட்சி பூங்காவில் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுமதி வழங்கியும், பராமரிப்பு

செலவு உள்ளிட்ட இதர தொடர்பாக மாமன்ற அனுமதி பெற்று நடைமுறை விதிகளின்படி, அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:20.11.98–ல் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சிக்கு அறிவுரை வழங்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

மேற்படி அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள் : 21.8.2007–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :130**

**பதிவு செய்யப்பட்டது.**

## 11) ம.வ.5/24425/2007

மதுரை மாநகராட்சி வார்டு எண் 34 வெங்கடசாமி நாயுடு அக்ரஉறாரம் கதவு எண் 4 வீட்டின் பின்புறத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடம் புதராக இருப்பதாலும், சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருகிறது என்றும், மேற்படி இடத்தை வாடகை அடிப்படையில் தனக்கு கொடுக்குமாறும், மேற்படி இடத்தை சுத்தமாக பராமரித்து சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பாடு நடப்பதாகவும் உறுதி கூறி தெரிவித்துள்ள திரு.எம்.முத்துகிருஷ்ணன் என்பவரின் மனு வாசிக்கப்பட்டு, மேற்படி இடம் சர்வே வார்டு எண்.7, பிளாக் எண்.13, டி.எஸ்.நம்பர் 7/1A1 ல் உள்ள இடம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடத்தின் வளாகத்திற்கு உள்ளே இருப்பதாகவும், மேற்படி இடம் மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று முதன்மை நகரமைப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கோரும் பிரஸ்தாப இடம் 48 x 73 சதுர அடி அளவில் உள்ளது. மேற்படி இடம் சமூக விரோதிகளால் ஆக்கரமிப்புகள் மற்றும் தகாத செயல்கள் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மாநகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டும் மேற்கண்ட 48 ‘ X 73 ‘ சதுர அடி அளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை ஏலம் / டெண்டர் மூலம் ஒப்படைக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :131**

**இப்பொருள் பரிசீலிக்க தேவையில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 12) பொ.2/13816/2006

மதுரை மாநகராட்சி வார்டு எண் 34 வெங்கடசாமி நாயுடு அக்ரஉறாரம் கதவு எண் 4A ஷேறப்பி மேன் திருமணமஉறால் உரிமையாளர் திரு. V. நடராஜன் தனது திருமண மஉறாலுக்கு அருகிலுள்ள மாநகராட்சி ஆதிமூலம் பிள்ளை அக்ரஉறாரம் எண் 2 ஆரம்பப்பள்ளி வளாகத்தின் பின்புறம் பயன் படாத நிலையில் காலியாகவுள்ள மேற்படி இடத்தில் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சமூக விரோத செயல்கள் செய்யப்படுவதால், மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுடன் மாத வாடகைக்கு மேற்படி காலியிடத்தை வழங்க கோரியுள்ளார். மாநகராட்சியின் வேறு பயன்பாட்டிற்கு மாற்றிக்கொள்ள ஆட்சேபனை இல்லை என்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் குறிப்பு கொடுத்துள்ளார். ஆய்வு செய்ததில் மேற்கண்ட இடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான 36 ‘ X 46 ‘ சதுர அடி அளவில் காலி இடம் உள்ளது. எனவே மாநகராட்சி ஆதிமூலம் அக்ரஉறாரம் எண் 2 ஆரம்பப்பள்ளி பின்புறம் உள்ள 36 ‘ X 46 ‘ சதுர அடி காலியிடத்தை மாநகராட்சிக்கு வேறு வகையில் மேற்கண்ட இடத்தினை பயன்படுத்தி கொள்ள அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் குறிப்பு கொடுத்துள்ளதாலும், சமூக விரோதிகளால் ஆக்கரமிப்புகள் மற்றும் தகாத செயல்கள் ஏற்படா வண்ணம் பாதுகாக்க பள்ளியின் பின்புறம் 36 ‘ X 46 ‘ சதுர அடி அளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை ஏலம் / டெண்டர் மூலம் ஒப்படைக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :132**

**இப்பொருள் பரிசீலிக்க தேவையில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 13) ம.வ.1/23871/ 2007

ஜவஹர்லால் நேரு நகர தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்காக மதுரை மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மாநகர அபிவிருத்தித் திட்டம் தயார் செய்து மத்திய மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் ஒப்புதல் பெறப்படும் பொழுது, மாநகராட்சியின் பல்வேறு இனங்களில் சீர்திருத்த நடவடிக்கை செய்ய, மதுரை மாநகராட்சி, மாநில அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவை மும்முனை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் சொத்துவரி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

1971 வருடாந்திய மதுரை மாநகராட்சி சட்டம் 122 பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

1) பொதுமக்கள் இறை வழிபாட்டிற்காக பயன்படுத்தும் இடங்கள்
2) பயன்படுத்துவதற்காக வாடகை வாங்காமல் இருக்கும் சத்திரங்களும், பயன்படுத்துவதற்காக சத்திரத்திற்கு வாங்கும் வாடகையை பிற காரியங்களுக்கு பயன்படுத்தும் சத்திரங்கள்.
3) கைவிடப்பட்டவர்கள் மற்றும் விலங்குகளுக்கு புகழிடம் அளித்தல், அனாதை குழந்தைகளின் இல்லங்கள், செவிடர் ஊமை விடுதிகள் மற்றும் பள்ளிகள், முதியோர் இல்லங்கள், நெறிபிறழ்ந்த மகளிர் காப்பிடம் ஆகியவைகள்.
4) தொல்பொருள் நினைவு சின்னங்கள், புராதன சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள்
5) இலவச மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களும்
6) இரயில்வே நிர்வாகத்தால் நடத்தப்படும் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்
7) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள்
8) ரூபாய் 199–க்கும் குறைவுடைய ஆண்டு மதிப்பு கட்டிடம் அல்லது நிலம்
9) வருமானம் இல்லாத அரசு சொத்து
10) அறக்கட்டளைகளுக்கு பாத்தியப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களும், அதனை சார்ந்த தங்கும் விடுதிகள் ஆகியவையும் வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இந்த இனங்களில் வழிப்பாட்டு தலங்கள், சுடுகாடுகள், இடுகாடுகள் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க புராதன சிறப்பு நினைவு சின்னங்கள் நீங்கலாக, வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மற்ற அனைத்து இனங்களுக்கும் வரிவிதிப்பு மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> மாமன்ற ஒப்புதல் பெற்றபின், அரசின் சட்டத் திருத்தம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

<u>மாமன்ற தீர்மானம் எண் :133</u>
<u>அரசின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படும் என தீர்மானிக்கிறது.</u>

## <u>14) ம.ந.3/28129 /2006</u>

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரம் சிக்குன் குனியா நோய் தடுப்பு சிறப்பு பணிக்காக வீடு வீடாக சென்று கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அபேட் மருந்து ஊற்றி அழிக்கும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி ரூ.85/- வீதம் தலா 25 நபர்களை மேற்கு மற்றும் வடக்கு மண்டலங்களுக்கு 50 நபர்களை பியூட்டி தொண்டு நிறுவனத்திற்கும், கிழக்கு மற்றும் தெற்கு மண்டலங்களுக்கு தலா 25 நபர்கள் வீதம் 50 நபர்களை திரு.எம்.ஜெயமுருகன் ஒப்பந்தகாரருக்கும், 21.9.2006 முதல் 31.5.2007 முடிய பணிபார்த்து வந்தமைக்கும் 25.9.2006 முதல் 30.4.2007 முடிய பணிபார்த்த காலத்திற்கான ஊதியம் ரூ.18,42,840/- வழங்கியதற்கும், மேற்படி இரண்டு நிறுவனங்களும் 1.6.2007 முதல் 31.3.2008 முடிய தொடர்ந்து பணியாளர்களை சப்ளை செய்யவும், மேலும் சிக்குன் குனியா சிறப்பு பணிக்காக கூடுதலாக நியமிக்கப்பட்ட 50 பணியாளர்கள் பணிபார்த்து வந்த 2.2.2007 முதல் 31.3.2007 வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்ட ஊதியம் ரூ.2,46,500/-க்கும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 3.7.2007 அன்று வழங்கியுள்ள முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :134</u>
<u>பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.</u>

## <u>15) ம.நி.1/18107 /2006</u>

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டப் பணிகளுக்கு புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு மாமன்றத் தீர்மானம் எண். 385, நாள்: 15.3.2007–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 2007–2008ம் ஆண்டிற்கான கணக்கு அலுவலர் பணிஉயர்வு பட்டியலில் வரிசை எண்.1ல் உள்ள திரு.எஸ். கலைச்செல்வன், கண்காணிப்பாளருக்கு அரசின் உறுதியாக்கத்தை எதிர்நோக்கி, கணக்கு அலுவலராக ரூ.6500-200-10500/- ஊதிய விகிதத்தில் பணி உயர்வு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :135</u>
<u>பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.</u>

## <u>16) ம.நி.1/18107 /2006</u>

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டப் பணிகளுக்கு அரசு ஆணை எண். 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 28.6.2007–ன்படி, முதற்கட்டமாக 2 ஆண்டுகளுக்கு 2 உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் 8000-275-13500/- என்ற ஊதிய விகிதத்தில் புதிதாக தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு மாமன்றத் தீர்மானம் எண். 172, நாள்:19.7.2006–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணி உயர்வுப் பட்டியலிலிருந்து வ.எண்.7ல் இருந்த திரு.கே.எம்.முகம்மது அசரப்

அலி இளநிலைப் பொறியாளர் மற்றும் வ.எண்.8–ல் இருந்த திரு.எல்.முருகேசன் இளநிலை பொறியாளர் ஆகியோரை உதவி செயற்பொறியாளராக அரசின் உறுதியாக்கத்தை எதிர்நோக்கி முற்றிலும் தற்காலிகமாக மநி.1/18107/06, நாள் : 25.7.2007 செயற்குறிப்பின்படி பணி உயர்வு வழங்கப்பட்டது. திரு. எல். முருகேசன், உதவி செயற்பொறியாளர் 31.7.2007–ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டதின் பேரில் மேற்படி காலிப்பணியிடத்தில் உதவி செயற்பொறியாளர் பணி உயர்வு பட்டியலில் வரிசை எண். 9ல் இருந்த திரு. கே. கணேசன், இளநிலை பொறியாளரை முற்றிலும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்தை எதிர்நோக்கி பணி உயர்வு வழங்கி மநி.1/18107/06 நாள் : 1.8.2007 எண்ணிட்ட உத்திரவின்படி உத்தரவிடப்பட்டது. அரசாணையின்படி மாமன்றத்தால் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட பணி உயர்வுப் பட்டியலிருந்து உதவி செயற்பொறியாளர் பணி உயர்வு வழங்கியதை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :136**
**பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 17) B30/13911/ 2005

மதுரை மாநகராட்சி பொறியியல் பிரிவு நான்கு மண்டலங்களிலும் குடிநீர் பாதாள சாக்கடை பணிகள் களப்பணிகள் மேற்கொள்ளவும், உடற்பயிற்சி நிலையம் மற்றும் சுற்றுச்சூழல் பூங்காவில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணிக்கும் தேவையான (மொத்தம் 195 நபர்கள்) தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நிபந்தனைகளின் பேரில் சப்ளை பெற டெண்டர் வர வழைக்கப்பட்டு குறைந்த விலை விகிதம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.75/- என விலை விகிதம் தந்துள்ள M/s. பிரைட் என்விரான்மென்ட் அவரினஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் (C1/5 மேலப்பொன்னகரம் 4வது தெரு, மதுரை–16) நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்று மாமன்றத்தின் தீர்மானம் எண்.174, நாள. 6.7.2005) ஒப்புதல் பெற்று ஓராண்டு காலத்திற்கு 2.8.2005 முதல் 31.7.2006 முடிய சப்ளை செய்ய உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. சப்ளை உத்திரவின்படி ஓராண்டு காலம் முடிவடையும் நிலையில் மாமன்றத்தின் (தீர்மானம் எண்.29 நாள்.29.6.2006) ஒப்புதல் பெற்று மேலும் ஓராண்டு காலத்திற்கு 01.08.2006 முதல் 31.07.2007 முடிய 203 நபர்கள் சப்ளை செய்ய உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

சப்ளை உத்திரவு காலம் 31.7.2007–ல் முடியவடைவதால், தொடர்ந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு சப்ளை செய்வதாக M/s. பிரைட் என்விரான்மென்ட் அவரினஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் நிறுவனத்தார் 3.7.2007ம் தேதியில் சம்மதக் கடிதம் கொடுத்து உள்ளனர். களப்பணிகள் செய்ய போதுமான பணியாளர்கள் இல்லை என்பதால், தொடர்ந்து களப்பணிகள் மேற்கொள்ள சம்மதக் கடிதத்தினை ஏற்று மேற்கண்ட நிறுவனத்தாருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்பேரில், ஒப்பந்த அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.75/- (ரூபாய் எழுத்தி ஐந்து மட்டும்) வீதத்தில் மொத்தம் 257 நபர்களை மேலும் ஓராண்டு காலத்திற்கு 01.08.2007 முதல் 31.07.2008 முடிய சப்ளை செய்ய வ.உ.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, சப்ளை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :137**
31.12.2007 **வரை நீடிப்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 18) ம.பொ.7/ம.எண்.1754/ 06-07

மதுரை மாநகராட்சி வார்டு 22, பொன்னகரம் குறுக்குத் தெருக்கள், கன்னி மாரியம்மன் கோவில் தெரு, முனியாண்டி கோவில் தெரு, I.V. சுப்பையா தெரு, G.R.மணி ஸ்டுடியோ தெரு மற்றும் ராமானுஜம் தெருக்களில் அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ், சிமெண்ட் சாலை அமைக்க ரூ.18.88 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று (மாமன்றத் தீர்மான எண்.380, நாள் : 15.3.2007) டெண்டர் வரவழைக்கப்பட்டது. 02.04.07ம் தேதி அன்று வரப்பெற்ற இரண்டு டெண்டர்கள் மதிப்பாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மதிப்பாய்வுக்குழுவில் வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் மதிப்பீடு விகிதத்திற்கு 0.13% விலை குறைவாக குறிப்பிட்டுள்ள திரு.எம்.வேலுச்சாமி ஒப்பந்தகாரரின் டெண்டரை ஏற்பு செய்ய தீர்மானிக்கப்பட்டு, வேலையின் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலைப் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. திரு.எம்.வேலுச்சாமி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :138**
**பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 19) ம.நி.5/4340/ 07

மதுரை மாநகராட்சி இராணிமங்கம்மாள் சத்திரத்தில் Room Service and House Keeping Sanitation முதலான பணிகள் செய்வதற்கு அன்னை தெரசா தொண்டு நிறுவனத்திற்கு மூன்று மாத காலத்திற்கு பரீட்சார்த்த முறையில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்தரவு பிரகாரம் அன்னை தெரசா தொண்டு நிறுவனம் இராணிமங்கம்மாள் சத்திரத்தில் அனைத்து அறைகளையும் சுத்தமாக வைத்திருப்பதாகவும், மேற்படி சத்திரத்தில் தங்கும் பயணிகளுக்குத்

தேவையானவற்றை செய்து கொடுத்து நல்ல முறையில் இயங்கி வருகிறது என சத்திர கண்காணிப்பாளரால் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி தொண்டு நிறுவனத்தின் பணி உத்தரவு காலம் 30.6.2007 உடன் முடிவடைவதால், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேலும் **6** மாதங்களுக்கு **(31.12.2007** வரை**)** நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :139**
**பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 20) ம.பொ.5/ம.எண்.(MP) 1130/ 05

மதுரை மாநகராட்சி வார்டு **42**ல் உள்ள சுப்பிரமணியபுரம் **4**வது மெயின் வீதி – அருந்ததியர் காலனியில் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி அருகேயுள்ள காலியிடத்தில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு ரூ.**25,00,000/-**க்கு (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டு பணிக்கு திரு. ஆர். சண்முகசுந்தரம், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் **2005–2006**ன் கீழ் ரூ.**10,00,000/-** (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ஒதுக்கப்பட்டுள்ளது. சமுதாயக்கூடம் கட்டுவதற்குண்டான மதிப்பீட்டு தொகை ரூ.**25.00** இலட்சத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரால் ஒதுக்கப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிப்பதற்கும், மேற்கண்ட நிதி ஆதாரங்களின் மூலம் அருந்ததியர் காலனியில் சமுதாயக்கூடம் கட்டும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண். 258/நாள் : **1.9.2005–**ல் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு டெண்டர் வரவழைக்கப் பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டன. அதில் M/s. Tower Steel Ltd, 18,19,20 SIDCO ESTATE, KAPPALUR, MADURAI-8. என்ற ஒப்பந்ததாரரின் மதப்பீடு விலை விகிதத்திற்கு சமமாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து, அன்னாருக்கு மாமன்றத் தீர்மானம் எண்.**59** / நாள் : **29.6.2006** குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு, வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட வேலையை அன்னார் துவங்கப்படாததால், உடன் தொடங்கி முடிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டும், மேற்கண்ட வேலையை துவங்கவில்லை. எனவே, ஆணையாளரின் **29.11.2006**ம் தேதிய உத்திரவின்படி அன்னாருக்கு வேலை உத்தரவு ரத்து செய்தும், மறு டெண்டர் வரவழைக்க கோரப்பட்டதில், மேற்கண்ட மதிப்பீடு **2006–2007**ம் ஆண்டின் விலை விகிதப்படி ரூ.**24.50** இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மறு டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் திரு. B.அழகு வேலாயுதம் **16B**, பழைய குயவர்பாளையம் ரோடு, மதுரை**–9** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.46% குறைவாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது. அன்னாருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை துவங்கும் உத்தரவை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :140**
**பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 21) H.1/14006 /2006

மதுரை மாநகராட்சி மகப்பேறு மனை, மருந்தங்கள் மற்றும் ஆப்ரேசன் தியேட்டர்களுக்கு துப்புரவு ஊழியர்கள் மற்றும் கூட்டுபவர்கள், தண்ணீர் எடுப்பவர்கள் அவசர அவசியம் கருதி **9** ஒப்பந்த பணியாளர்கள் திரு. எம். முருகேசன் என்பவர் மூலம் சப்ளை செய்யப்பட்டு, **4–1–2007** முதல் பணியாற்றி வருகின்றனர். அவசரப் பணிக்காக **20–12–2006**ல் ஆணையாளர் ஒப்புதல் பெற்று மேற்படி ஊழியர்கள் தொடர்ந்து இன்று வரை பணியாற்றி வருவதாலும், **4–1–2007** முதல் **30–6–2007** வரை பணியாற்றிய காலத்திற்கு ஒப்பந்தாரருக்கு தொகை ரூ.87,560/- வழங்கியதற்கும், தொடர்ந்து **1–7–2007** முதல் **30–6–2008** வரை மேற்கண்ட ஊழியர்களை பணியில் வைத்துக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :141**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 22) ம.ந.1/14054 /2004

மதுரை மாநகராட்சி மைய சுகாதாரப்பிரிவு, **24** மணிநேரம் மருத்துவமனைக்கு அவசர அவசியத்தை கருதி ஆணையாளரின் உத்தரவுப்படி திரு.எம். முருகேசன் என்பவர் மூலம் சப்ளை செய்யப்பட்டு **10** ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் **13–10–2004** முதல் பணியாற்றி வருகின்றனர். மேற்படி பணியாளர்களுக்கு **13–10–2004** முதல் **30–6–2007** வரை ரூ.**5,55,995/-** வழங்கப்பட்டுள்ளது. அவசரப் பணிக்காக ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணியை நீட்டித்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே 24 மணி நேரம் மருத்துவமனைக்கு அவசர அவசியத்தை 10 ஒப்பந்த துப்புரவு ஊழியர்கள் 13–10–2004 முதல் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ததற்கும், 13–10–2004 முதல் 30–6–2007 வரை தொகை வழங்கப்பட்டதற்கும், தொடர்ந்து மேற்கண்ட ஊழியர்களை ஒப்பந்தப் பணியில் வைத்துக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :142**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 23) ம.ந.2/06561 /2003

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் மகப்பேறு மனைகளில் காலியாக உள்ள 16 ஒப்பந்த பெண் துப்புரவு ஊழியர்கள் பணியிடங்களுக்கு ஊழியர்கள் சப்ளை செய்ய டெண்டர்கள் வரவழைக்கப்பட்டு, திரு. ஜெயமுருகன் என்பவருக்கு 13–7–2004ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி துப்புரவு ஊழியர்களை தொடர்ந்து சப்ளை செய்ய வேலை நீட்டிப்பு செய்து 21–3–2005ல் உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி 16 ஒப்பந்த துப்புரவு ஊழியர்கள் சப்ளை செய்த காலம் 31.3.2006 உடன் முடிவடைந்து விட்டதால், மேலும் நீட்டிப்பு செய்து 15.6.2006ல் உத்தரவு வழங்கப்பட்டது. எனவே, 13.7.2004 முதல் 30.6.2007 முடிய மேற்கண்ட 16 ஒப்பந்த பணியாளர்கள் மகப்பேறு மனைகளில் துப்புரவு பணி பார்த்து வந்தமைக்கும், அதற்கான தொகை ரூ.11,47,326/- வழங்கப்பட்டதற்கும், தற்போது 1.7.2007 முதல் 31.3.2008 முடிய மேற்படி 16 துப்புரவு ஊழியர்கள் தொடர்ந்து மகப்பேறு மனைகளில் பார்த்து வருவதற்கும், அதற்கான ஒப்பந்தத் தொகை வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :143**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 24) ம.ந.2/33633 /2004

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் மகப்பேறு மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவைகளுக்கு 15 இரவு காவலர்கள் சப்ளை செய்ய நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.84 வீதம் விலைப்புள்ளி வரவழைக்கப்பட்டு 20–12–2006 முதல் ஓராண்டிற்கு குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனருக்கு 20–12–2006 ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாருக்கு 20–12–2006 முதல் 30–6–2007 வரை பணிபுரிய அனுமதித்ததற்கும், அதற்கான ஒப்பந்த தொகை ரூ.2,39,988/- வழங்கியதற்கும், 1–7–2007 முதல் 30–6–2007 வரை மேற்கண்ட ஊழியர்களை தொடர்ந்து பணிபுரிய நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :144**

30.6.2008 **வரை நீடிப்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 25) ம.ந.2/13911 /2005

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் மகப்பேறு மருத்துவமனை, மருந்தங்கள் ஆகியவைகளுக்கு 15 பகல் காவலர்கள் ஆணையாளர் அவர்களின் உத்தரவுப்படி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.84,– வீதம் 29–1–2007 முதல் ஓராண்டிற்கு அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனருக்கு சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாருக்கு பணியாளர்கள் 30–6–2007 வரை பணியாற்றிய காலத்திற்கு உரிய தொகை ரூ.1,89,000/-வழங்கியதற்கும், 1–7–2007 முதல் 30–6–2008 வரை மேற்கண்ட ஊழியர்களை தொடர்ந்து பணிபுரிய வைத்து கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :145**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 26) ம.ந.3/28128 /2006

மதுரை மாநகராட்சி சிக்குன் குனியா நோய் தடுப்பு தடுப்பு சிறப்பு பணிக்காக வைகை ஆற்றின் கரையோரம் வளர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகளை அகற்றி, கொசுப்புழு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 20 தினக்கூலி பணியாளர்களை தினக்கூலி ரூ.85/- வீதம் ஒப்பந்த அடிப்படையில் திரு. எம். ஜெயமுருகன் என்பவருக்கு சப்ளை செய்ய 1–9–2006ல் உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேற்கண்ட பணியாளர்களுக்கு 22–9–2006 முதல் 30–4–2007 வரை ரூ.3,75,700/- வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 20 தினக்கூலி பணியாளர்கள் 1–6–2007 முதல் 31–7–2007 முடிய மட்டும் தொடர்ந்து பணிபார்த்து வருவதற்கும், ஏற்கனவே .9/2006 முதல் 4/2007 வரை தொகை வழங்கப்பட்டதற்கும், 1.5.2007 முதல் 31.7.2007 வரை ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :146**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 27) ம.ந.3/ 19139 /2004

மதுரை மாநகராட்சி கொசு ஒழிப்பு பணிக்காக வாங்கப்பட்ட இரண்டு புகைப் பரப்பும் இயந்திரங்கள் வைத்து புகைப்பரப்பும் பணியை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி இரண்டு ஆட்டோக்கள் சப்ளை செய்ய **3–8–2004**ல் டெண்டர் வரவழைக்கப்பட்டது. ஆட்டோ ஒன்றுக்கு ஒரு நாள் வாடகை ரூ.**350** வீதம் திரு. சி. மாயத்தேவர் ஒப்பந்ததாரருக்கு **20–8–2004**ல் உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி வேலை உத்தரவு **30–4–2005** வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் **2005–2006**க்கு மேற்படி ஆட்டோக்கள் தொடர்ந்து சப்ளை செய்ய டெண்டர் வரவழைக்கப்பட்டு, பழைய ஒப்பந்ததாரர் திரு.சி.மாயத்தேவருக்கு **1–5–2005** முதல் **31–5–2005** வரை கால நீட்டிப்பு செய்தும், டெண்டரில் கலந்து கொண்ட குவாலிட்டி சொசைட்டிக்கு **1–6–2005** முதல் **30–6–2006** முடிய **2** ஆட்டோக்கள் சப்ளை செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கொண்டு புதிதாக இரண்டு புகைப்பரப்பும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு அதனை ஆட்டோக்களில் வைத்து பொருத்தி ஏற்கனவே சப்ளை செய்து வந்த குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டிக்கு **28–9–2005** மற்றும் **17–3–2006**ல் உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட ஆட்டோக்கள் சப்ளை செய்வதற்கு **30–6–2006** உடன் காலம் முடிவடைந்துவிட்டதால், தொடர்ந்து சப்ளை செய்ய காலம் நீட்டிப்பு செய்து **15–6–2006**ல் உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே நான்கு மண்டலங்களிலும் உள்ள **4** புகைப்பரப்பும் இயந்திரங்கள் மூலம் புகைப்பரப்பும் பணியை மேற்கொள்ள **1–7–2006** முதல் **30–4–2007** முடிய ஆட்டோக்கள் சப்ளை செய்ததற்கும், **1–6–2007** முதல் **31–8–2008** வரை மட்டும் சப்ளை செய்ய குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டிக்கு அனுமதிப்பது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** 1.5.2007 முதல் 31.5.2007 முடிய 4 ஆட்டோக்கள் இயங்கவில்லை.

**மாமன்ற தீர்மானம் எண் :147**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 28) ம.பொ.7/ம.எண்.246/ 07

மதுரை மாநகராட்சி வார்டு எண்.72–ல் புதிய பாதாள சாக்கடை அமைக்கும் பணியின்போது தேனி மெயின் ரோட்டில் பல இடங்களில் குடிநீர் மெயின் சேதமடைந்துள்ளது. எனவே தேனி மெயின் ரோடு டி.வி.எஸ். அருகிலிருந்து விராட்டிபத்து, பி.டி.ஆர்.நகர் வரை 300mm விட்டம் ஏ.சி.மெயின் பதிக்க 2007–2008ம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.22,00,000/- (ரூபாய் இருபத்தி ரெண்டு லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** இவ்வேலைக்கு செலவிடப்படும் தொகை ரூ.22.00 இலட்சம் சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் :148**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 29) ஏ.8/16649/ 07

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கீழ்கண்ட இரு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்த கல்விக்குழுத் தீர்மானம் எண்.14, நாள் : 12.07.2007 கூட்டக்குறிப்பு ஒப்புதல் பெறப்பட்டது.

| வ.எண். | பள்ளியின் பெயர் | வார்டு எண். | மாணவர் எண்ணிக்கை | கட்டிட வசதி |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளுவர் (மகால்) உயர்நிலைப்பள்ளி | 46 | 189 | போதுமானது. |
| 2 | பாரதிதாசனார் (புதுமகாளிப்பட்டி) | 45 | 294 | போதுமானது. |

மேற்கண்ட இரு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், தலா இரண்டு லட்சம் ரூபாய் மக்கள் பங்குத் தொகை செலுத்தவும் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :149**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 30) ம.தி.2/00989/ 2004

மதுரை மாநகராட்சி எம்.கே.புரம் மாடக்குளம் கிராமம் புல எண்.**53**/2-ல் அவனியாபுரம் கண்மாய் புறம்போக்கில் பத்து வருடங்களுக்கு மேலாக ஆக்கிரமித்து குடிசை போட்டுள்ள திரு.கே.கோட்டுராஜா என்பவருக்கு தெற்கு வட்டாட்சியர் அவர்களின் ந.க.எண். சி2/3086/03, நாள். 29.11.03ந் தேதிய கடிதத்தில் திரு.கே.கோட்டுராஜாவிற்கு ஏற்கனவே **187**

ச.அடிக்கு பட்டா வழங்குவதற்கு ஆட்சேபணையில்லாச் சான்று வழங்கும்படி கோரியுள்ளார். மேற்கண்ட இடம் சாலைக்கான பகுதியிலோ, மாநகராட்சிக்கு தேவையான பகுதியிலோ இல்லையாதலால் மாடக்குளம் கிராமம் புல எண். 53/2-ல் அமைந்து **210** ச.அடிக்கு திரு.கே.கோட்டுராஜா என்பவருக்கு பட்டா வழங்க மாநகராட்சியின் ஆட்சேபணை இல்லா சான்றளிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :150</u>**

**<u>நகரமைப்புக்குழு பரிசீலனைக்குப்பின் மீண்டும் மாமன்றக் கூட்டத்தில் வைக்க தீர்மானிக்கிறது.</u>**

## <u>31) ம.தி.1/5564/ 07</u>

மதுரை மாநகராட்சி வார்டு–**3**, கோ.புதூர் மாதா கோவில் **3**வது தெரு சர்வே எண்.**189**–ல் காலியாக உள்ள 8½ செண்ட் இடத்தில் **5** செண்ட் இடத்தை பொது நூலகம் கட்ட இனாமாக கொடுக்கும்படி மதுரை மாவட்ட நூலக அலுவலர் ந.க.எண். 3341/டி/2007 நாள்:**19.6.07**ல் கோரப்பட்டுள்ளது. மேற்படி இடம் சர்வே வார்டு XX1 பிளாக் எண்.**46**, Ts.No.189-ல் கட்டுப்பட்டதாகும் மாநகராட்சிக்கு சொந்தமான இடமாகும். மேற்படி காலியிடம் 8 ½ செண்ட்டில் **5** செண்ட் இடத்தை மதுரை மாவட்ட ஆவணக்குழுவிற்கு அரசின் ஒப்புதல் பெற்று நிலக்கிரையம் பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :151</u>**

**<u>நகரமைப்புக்குழு பரிசீலனைக்குப்பின் மீண்டும் மாமன்றக் கூட்டத்தில் வைக்க தீர்மானிக்கிறது.</u>**

## <u>32) ம.தி.1/27546/ 07</u>

மதுரை மாநகராட்சி சர்வே வார்டு–**10**, சர்வே எண்.**874/1**–ல் சொக்கிகுளம் கிராமம், சொக்கிகுளம் கண்மாய் புறம்போக்கில் ஆக்கிரமிப்பில் உள்ள 4.45 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு மதுரை மாநகராட்சி மாமன்றத் தீமானத்தை அனுப்பி வைக்குமாறு வருவாய் துறை அரசு இணை செயலாளர் கடிதம் எண். 12229/LD-VII/2007 நாள் : **2.8.2007**–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் கண்மாய் புறம்போக்காகும். தற்போது இடம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்பு வீடுகளாக உள்ளது. ஆகவே 4.45 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்ய ஆட்சேபனை ஏதும் இல்லையென தெரிவிக்கும் தடையில்லா சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :152</u>**

**<u>குறிப்பு கொள்ளப்பட்டது.</u>**

## <u>33) H.F.1/18539/ 07</u>

இம்மாநகராட்சியில் பொது சுகாதாரத் துறையின் கீழ், குடும்ப நலப்பிரிவில் **2002–2003**ம் நிதியாண்டு முடிய பணி செய்து ஒய்வு பெற்ற குடும்ப நல விரிவாக்க கல்வியாளர் பணியிடத்திற்கு தகுதி உள்ள பணியாளர்கள் விண்ணப்பித்ததின் பேரில் (திருமதி. மோகனசுந்தரி சுகாதாரப் பார்வையாளர் மற்றும் திருமதி.ஷண்முகவள்ளி–தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்) மேற்படி பணியிடத்தில் பணியமர்த்துவதற்கு அரசிடம் அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :153</u>**

**<u>குறிப்பு கொள்ளப்பட்டது.</u>**

## <u>34) கி.ம.நி.3/2151/ 2006</u>

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வருவாய் பிரிவில் உரிமையாணை ஆய்வாளராகப் பணியாற்றி **31.12.2004**ல் ஓய்வுபெற்ற திரு. எஸ். மீர்குலாம் தஸ்தகீர் என்பவர் விளம்பர வரி தொடர்பான நிலுவைகள் வசூல் செய்ய முடியாத இனங்கள் என்பதால், விளம்பர வரி நிலுவைத் தொகை ரூ.**4,74,236**/-ஐ வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் வைத்து வஜா செய்யலாம் என முடிவு செய்து அதன்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் குறிப்பு வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.**20**, நாள். **24.8.2006**ல் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையினரின் கடிதம் ஒ.மு.எண். **2059**/23/2006 நாள். **23.10.2006**–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மேற்கண்ட வரிவிதிப்பு குழுவின் தீர்மானத்தை மாமன்றத்தின் முன் வைத்து ஒப்புதல் பெற்று அரசுக்கு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :154</u>**

**<u>குறிப்பு கொள்ளப்பட்டது.</u>**

## 35) B 30 / 01461/ 05

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் தெருவிளக்குகளை குறித்த நேரத்தில் மாலையில் ஒளிரவிடவும், குறித்த நேரத்தில் காலையில் அணைக்கவும் மின் சக்தி சேமிப்பு கருவிகளை நிறுவி (BOT) முறையில் அமுல்படுத்தவும் டெண்டர் வரவழைத்து செயல்படுத்த மாமன்ற தீர்மானம் எண் 292 நாள் 03.03.05 ஒப்புதல் பெற்று, மின்சேமிப்பு திட்டம் அமுல்படுத்த தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் விளம்பரம் வெளியிட்டு 30.11.05ல் டெண்டர் வரப்பெற்று டெண்டர்களில் தொழில்நுட்ப ஒப்பளிப்பு 23.12.05 ல் நடைபெற்ற (Evaluation Committee) மதிப்பாய்வு குழு பரிசீலனை செய்ததில் M/S. SRS Engineers கோயமுத்தூர் நிறுவனத்தாரின் தொழில்நுட்பம் ஏற்றுக் கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 580 நாள் 22.02.06 தீர்மானத்தின்படி M/S.SRS Engineers நிறுவனத்தாருக்கு வேலை துவங்க கடந்த 23.08.06ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. BOT முறையிலான பணிகளை Dec 2006 க்குள் முடிக்க வேண்டும் ஆனால் M/s.SRS Engineers நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட காலத்திற்குள் பணியை தொடங்காததால் SRS நிறுவனத்தாருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்து கடந்த 08.03.07 தேதியில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. நோட்டீஸ் பெற்று கொண்ட SRS Engineers நிறுவனத்தார் ஜீன் 2007 மாதம் இறுதிக்குள் பணிகளை முழுமையாக செய்து தருவதாக 18.03.07 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர். M/S.SRS நிறுவனத்தாரிடம் ஏற்கனவே Tender ல் தெரிவித்துள்ள Technology யுடன் கூடுதலாக GSM Technology வசதியுடன் Energy Save செய்து தர இயலுமா? என 26.03.07 தேதியில் கடிதம் கொடுக்கப்பட்டது.

இக்கடிதத்தை பெற்றுக் கொண்ட M/S.SRS Engineers நிறுவனத்தார் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட RF Technology க்கு பதிலாக GSM Technology வசதியுடன் செய்து தரவும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவை சரிகட்ட பங்களிப்பு தொகையில் 33சதவீதமும் அதற்கு மேல் செய்யப்படும் சேமிப்புக்கு 95 சதவீதம் நிறுவனத்தாருக்கும் 5 சதவீதம் மாநகராட்சிக்கும் அளிக்க சம்மதம் தெரிவித்து 16.04.07 தேதியிட்ட கடிதம் அளித்துள்ளார். மேலும் இத்திட்டத்தை அமுல்படுத்துவதினால் மாநகராட்.சிக்கு எவ்வித செலவினமும் இல்லை. எனவே கூடுதல் வசதியுடன் கூடிய GSM Technology முறையில் மின்சக்தி சேமிப்பு கருவியை M/S.SRS Engineers நிறுவனத்தாருடன் ஒப்பந்தம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் கூட்டக்குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :155**</u>
<u>**குறிப்பு கொள்ளப்பட்டது.**</u>

## 36) ம.தி.1/28337/ 07

மதுரை மாநகராட்சி வார்டு–8, அண்ணாநகர் எல்.ஐ.ஜி. காலனியில் உள்ள நூலக கட்டிடம் அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் 15000 ச.அடி நிலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் துணை மின் நிலையம் அமைக்க வழங்குமாறு தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் (பகிர்மானம்) க.எண். உ.செ.பொ./ப/அ.நகர்/வ.ஆ./அஎ384/07 நாள் : 4.8.2007–ல் கோரப்பட்டுள்ளது. மேற்படி, இடம் சர்வே வார்டு XIX பிளாக் 6–ல் நகர புல எண்.10–ல் கட்டுப்பட்ட இந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடமாகும். அந்தப் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அண்ணாநகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைவது அவசியமாகிறது. எனவே, நிலக்கிரையம் பெற்றுக் கொண்டு 15000 ச.அடி நிலத்தை அரசின் ஒப்புதலைப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :156**</u>
<u>**குறிப்பு கொள்ளப்பட்டது.**</u>

## 37) ம.தி.1/8364/ 07

தல்லாகுளம் கிராமம் Rs.No.851/1 மற்றும் 855/2–ல் உள்ள 24 செண்ட் காலிமனையில் ஒரு பன்முக மருத்துவமனை (Poly Clinic)யை முன்னால் இராணுவத்தினருக்காக கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும், மாநகராட்சி எல்லைக்குள் இருப்பதால் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் மூலம் “ஆட்சேபணை இல்லா சான்று ” வழங்கும்படியும் மதுரை மாவட்ட ஆட்சியர் தமது ந.க.எண்.6165/05 நாள் : 14.7.2007–ல் நேர்முகக் கடிதத்தில் கோரியிருக்கிறார்.

இந்த இடம் அரசுக்கு சொந்தமான காலியிடம் மற்றும் வாய்க்கால் புறம்போக்கு இடமாகும். சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு காலிமனையாக உள்ளது. எனவே முன்னால் இராணுவனத்தினருக்காக பன்முக மருத்துவமனை கட்ட தடையில்லா சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :157**</u>
<u>**குறிப்பு கொள்ளப்பட்டது.**</u>

## 38) ம.பொ.6/30508/ 07

மதுரை மாநகராட்சி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். மேலும் இத்திருக்கோயில் யானைகள், ஒட்டகங்கள், மாடுகள் குடிநீர் வகைக்கு ¾ ” குழாய் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானதாக இல்லை என்று இத்திருக்கோயில் நிர்வாகத்தினரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதற்கு பதிலாக 1 ½ ” விட்டமுள்ள குழாய் மூலம் மூன்று எண்ணிக்கை குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :158**</u>
<u>**குறிப்பு கொள்ளப்பட்டது.**</u>

## 39) ம.பொ.4/24872/2007

மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச் நீதிபதிகள் பங்களாக்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளுக்கு பைப்லைன் மூலம் இணைப்புக் கொடுக்க ஆவண செய்யக் கோரிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு சார்பு செயலரிடமிருந்து பரிந்துரைத்து வரப்பெற்ற கடிதங்களின் அடிப்படையில் மாநகராட்சி வைகை குடிநீர் திட்டப் பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும், குடிநீர் வழங்குவதற்குரிய பணிகளுக்கு ரூ.60.00/- லட்சம் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளுக்கு ரூ.63.00/- லட்சத்திற்கும் தோராயமாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொகையை பொதுப்பணித்துறை மூலம் மாநகராட்சிக்கு செலுத்துவதற்கும், மாநகராட்சி ஒட்டியுள்ள பஞ்சாயத்து எல்லைக்குள் இணைப்பு வழங்குவதற்கும் அரசின் ஒப்புதலை பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :159**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 40) தெ.ம.பொ.5/8116/07

மதுரை மாநகராட்சி, வார்டு எண்.43ல் பிள்ளையார் பாளையம் ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீமுத்தாநந்தசுவாமி மடம் குடும்ப தர்ம திருக்கோயிலுக்கு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்குமாறு கோரியுள்ள மனுதாரர்கள் மனுவின் மீது வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் 43வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஆகியோர்களின் பரிந்துரையின் பேரில் மேற்கண்ட திருக்கோயிலுக்கு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :160**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 41) B30/31626/07

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின்கீழ் குடிசை பகுதியில் வீடுகள் கட்டிதரவும் அதற்குரிய தெருவிளக்குகள் அமைக்கவும் மற்றும் குடிசை மேம்பாட்டு திட்டத்திலும் பொது நிதியிலிலும் அமைக்க வேண்டிய புதிய தெருவிளக்குகளுக்கு மின்சேமிப்பை கருத்தில் கொண்டு 2x36W CFL விளக்குகள் 300 எண்ணம் 4X24W T5 விளக்குகள் 200 எண்ணமும் டெண்டர் வரவழைத்து ரூ.24,94,000/- மதிப்புள்ள மேலே குறிப்பிட்டுள்ள பிட்டிங்கள் கொள்முதல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :161**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 42) ம.தி.2/24446/07

மதுரை மாநகராட்சி வார்டு எண் 69இ பொன்மேனி கிராமம் Rs.No.151/1இல் ஆரம்ப பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஏற்கனவே குடியிருப்புப் பகுதியாக மாற்ற மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள பகுதி போக மீதமுள்ள 208ச.மீ இடத்தையும் குடியிருப்புப் பகுதியாக மாற்றித்தரக் கோரி மனுதாரர் திரு.K.சுந்தர் ஜெயக்குமார் என்பவர் மனுச் செய்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ,ம(ம.ம) எண்120/83ன்படியும், அங்கீகரிக்கப்பட்ட பொன்மேனி விரிவு அபிவிருத்தி திட்டம் பாகம் IIIன் படியும் இந்த இடம், பள்ளிக்கூட உபயோகத்தில் அமைகிறது. இந்த மனையில் ஒரு பகுதியை குடியிருப்பு பகுதியாக மாற்றிக் கொள்ள ஏற்கனவே மாமன்ற ஒப்புதலுடன் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள பகுதியையும் குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :162**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 43) ம.ந.2/9156/07

திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு 02–04–2007 முதல் 29–06–2007 வரையிலான 89 நாட்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக பணிசெய்த தினக்கூலி ஊழியர்கள் 400 நபர்களுக்கு பட்டியல் தொகை ரூபாய்.32,75,200 வழங்கியதற்கும், 01–07–2007 முதல் 89 நாட்களுக்கு 400 தினக்கூலி துப்புரவு ஊழியர்கள் முற்றிலும் தற்காலிகமாக பணி செய்வதற்கும், மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரியும் மற்றும் ஒவ்வொரு 89 நாட்கள் முடிந்தவுடன் திருவிழாக் காலங்களில் தற்காலிக துப்புரவு ஊழியர்கள் எடுப்பது போல், மதுரை மாநகராட்சியே 400 தினக்கூலி துப்புரவு ஊழியர்களை, வேலை வாய்ப்பு அட்டையை பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர்கள் மூலம் தற்காலிகமாக தினக்கூலி ஊழியர்கள் எடுத்து பணி செய்யவும், அதற்கான ஊதியம் வழங்கவும், மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :163**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 44) ம.ரு.2/9156/07

திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு தெற்கு மண்டலம் வார்டு 37–ல் அமைந்துள்ள சென்ட்ரல் மார்க்கெட் பகுதியை சுத்தம் செய்ய **9.4.2007** முதல் மறு உத்தரவு பிறப்பிக்கும்வரை **15** தற்காலிக ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பியூட்டி தொண்டு நிறுவனம் மூலம் சப்ளை செய்ய உத்தரவு வழங்கயதற்கும், **9.4.2007** முதல் **31.7.2007** வரைக்கும் மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.**1,57,320** வழங்கியதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரியும், **1.8.2007** முதல் மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை மேற்கண்ட **15** தற்காலிக ஊழியர்களை பணிபார்க்க அனுமதித்தும் மாமன்ற கூட்டத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :164**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 45) ம.பொ.8/39657-III/ 06

மதுரை மாநகராட்சி - ஜவஉறர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டம் - குடிநீர் அபிவிருத்தி திட்டம் II - பேக்கேஜ் III - ஐந்துமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் மற்றும் - பகிர்மானக் குழாய் பதித்தல் தொடர்பாக - ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. மதிப்பீட்டு தொகை ரூ.13.57 கோடி. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 10.01.2007 ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்த புள்ளி அளித்துள்ளனர்.

1. M/s. P & C Constructions Pvt., Ltd., ஈரோடு.
2. M/s. Siva Engineering Pvt., Ltd., திருப்பூர்.

மேற்கண்ட இரு நிறுவனங்களில் M/s. P & C Constructions Pvt., Ltd., ஈரோடு. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அது விலைக்குறைப்புக்குப் பின்னும் திருத்திய மதிப்பீட்டைவிட 30.52 % அதிகம் இருந்ததால் ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்பட்டு இரண்டாவது முறையாக 28.03.07 ம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளி அளித்தனர்.

1. M/s. P & C Constructions Pvt., Ltd., ஈரோடு.
2. M/s.Maruthi Construction Pvt., Ltd., சேலம்.

அதில் M/s. P & C Constructions Pvt., Ltd., ஈரோடு. குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்தார். அதுவும் விலைகுறைப்புக்குப் பின்னும் திருத்திய மதிப்பீட்டைவிட 27.15 % அதிகமாக இருந்ததால், இந்த முறையும் நிராகரிக்கப்பட்டு மூன்றாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 21.06.2007 ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதில் M/s. P & C Constructions Pvt., Ltd., ஈரோடு. மட்டுமே ஒப்பந்தப்புள்ளி அளித்தது.

இந்தப்பணிக்கு அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி விலை குறைத்து கொடுக்க 20.07.07 ம் தேதியன்று கோரப்பட்டதின் பேரில் விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி விலைகுறைப்பு செய்ததின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு ஒப்பிடப்பட்டது.

1. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்துறை 2007 - 08 விலைப்பட்டியல் மதிப்பீட்டுத்தொகையின்படி - 24.13 %அதிகம்.
2. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்துறை மற்றும் த.கு.வ.வாரிய விலைப்பட்டியல் மதிப்பீட்டுத்தொகையின்படி - 13.29 %அதிகம்
3. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்துறை த.கு.வ.வா மற்றும் உள்ளூர் சந்தை விலையின் மதிப்பீட்டுத்தொகையின்படி -10.18 %அதிகம்

நகராட்சி பொறியியல் விதிகள் Volume – 1 பக்கம் எண் 9. பத்தி எண் 2.72 ல் 5% முதல் 10% மதிப்பீட்டை விட அதிகமாக உள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்பதற்கு ஒப்பந்தபுள்ளி ஊர்ஜிதக் குழுவின் (Tender Award Committee ) ஒப்புதல் பெற வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும் 10% மேல் அதிகமாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு Tender Award Committee யில் ஒப்புதல் பெற வேண்டும் என G.O.No.34. MS &WS Dept. Manual Page No 2.7.3 லும் வகை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசு ஆணை மற்றும் பொறியியல் விதிகளின் படி, அதிக சதவீதத்தில் வரப்பெற்றுள்ள M/s. P & C Construction Company, ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் உள்ள ஒப்பந்த ஊர்ஜித குழுவினரின் அனுமதி வேண்டியும், குடிநீர் வினியோக அவசியத்தை முன்னிட்டும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்ற அனுப்பப்பட்டது.

05.09.07 அன்று ஆணையர் நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஒப்பந்த ஊர்ஜித குழுவில் கீழ்கண்ட விவரங்களுடன் மீண்டும் குழுவின் ஒப்புதலுக்கு வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

1. மாமன்றத் தீர்மானத்தின் ஒப்புதல் நகல்.
2. மதிப்பீட்டுத்தொகையைவிட அதிகமாக கோரப்பட்டுள்ள தொகைக்கு நிதி ஆதாரம் தெரிவித்தல்.
3. ஒப்பந்தக்காரரிடம் மீண்டும் ஒரு முறை விலை குறைப்பு கடிதம் கேட்டல்.
4. இரண்டாவது விலை குறைப்பு அலுவலக கூட்ட நடவடிக்கையின் நகல் ஒப்பந்த ஊர்ஜித குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள, மதிப்பீட்டை விட மிகவும் அதிகமாக உள்ள எண்ணங்களுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளின் படி விலை விகித திறன் ஆய்வு செய்து ஒப்பந்த ஊர்ஜித குழுவிற்கு அனுப்புதல்.

மேற்கண்ட ஒப்பந்த ஊர்ஜித குழுவின் ஆலோசனையின் படி L1 ஒப்பந்தக்காரர் M/s. P & C Consultants Pvt. Ltd., Erode அவர்களிடம் மீண்டும் விலை குறைப்புக் கடிதம் 13.09.07கேட்கப்பட்டது. அதன் பேரில் மேற்படி கம்பெனியர் 14.09.07 அன்று கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளார்.

1. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்துறை 2007 - 08 விலைப்பட்டியல் மதிப்பீட்டுத்தொகையின்படி - 23.37 %அதிகம்.
2. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்துறை மற்றும் த.கு.வ.வாரிய விலைப்பட்டியல் மதிப்பீட்டுத்தொகையின்படி - 12.35 %அதிகம்
3. விலை குறைப்பிற்குப் பின் திருத்திய பொதுப்பணித்தறை த.கு.வ.வா மற்றும் உள்ளூர் சந்தை விலையின் மதிப்பீட்டுத்தொகையின்படி - 9.45 %அதிகம்

எனவே, திட்ட மதிப்பீட்டை விட 23.37% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உள்ள Tender Award Committee ன் அனுமதி வேண்டி பரிந்துரை செய்யவும், மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக கோரப்பட்டுள்ள தொகை ரூ. 3,85,41,085.90 யை மாநகராட்சி சார்பாக TUFIDCO நிறுவனத்திலிருந்து கடனாக பெற்று நிதிப் பற்றாக்குறையை சரி செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :165**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 46) B30/16714/ 07

மேற்கு மண்டல தெருவிளக்கு மின்கட்டணங்கள் குறைப்பதற்கு குழல்விளக்கு மற்றும் சோடியம் ஆவிவிளக்குகளுக்கு பதிலாக Energy Saver Light Fitting மாற்றுவதற்கும் மேலும் தெருவிளக்கு மின் இணைப்பு சுவிட்சுகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒளிரவிடவும், குறிப்பிட்ட நேரத்தில் அணைக்கவும் Automatic Timer Switch தானியங்கி சுவிட்சு கன்ட்ரோல் சிஸ்டம் அமைப்பதற்கும் இதற்கான செலவினத்தை 12வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் செயல்படுவதற்கு டெண்டர் வரவழைக்க மாமன்றத் தீர்மான எண். 65, நாள் : 18.7.2007–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தற்போது BOT முறையில் இப்பணிகளை செய்ய ESCO நிறுவனங்களிடமிருந்து ஆர்வம் இருப்பதால் கட்டி உருவாக்கி இயக்குதல் மற்றும் ஒப்படைக்கும் திட்டத்தின் கீழ் (BOT) நிறைவேற்ற டெண்டர் வரவழைக்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :166**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 47) H.2/31541/07

மதுரை மாநகராட்சி – பொது சுகாதாரம் – மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த உத்தரவின் அடிப்படையில், மதுரை மாநகராட்சி மயான பூமிகளில் மாநகராட்சியின் உரிமம் பெற்று வெட்டியான்களாக பணிபுரியும் 40 நபர்களையும், மயான உதவியாளர்கள் என்ற பணியிடத்தை உருவாக்கி அதில் மேற்படி நாற்பது மயான உதவியாளர்களையும் (வெட்டியான்களையும்) 2550-55-2660-60-3200 என்ற காலமுறை சம்பளத்தில் மாநகராட்சியின் துப்புரவு ஊழியர்கள் பணியிடங்களில் தற்சமயம் காலியாக உள்ள பணியிடங்களில் 40 பணியிடங்களுக்கு பதில் மயான உதவியாளர் பணியிடங்கள் 40 உருவாக்கி, அதில் மேற்படி நாற்பது நபர்களை நியமித்து கொள்ளவும், அவர்களுக்கான சீருடை, காலணி, கையுறை முதலியவை வழங்குவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான கருத்துரு கேட்டு அரசுக்கு கடிதம் அனுப்பவும் ஆணையாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் மாமன்றக் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :167**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 48) ம.பொ.4/ம.எண்.1486/ 06

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.3ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாயை சுற்றிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பதற்கு கழிவுநீர் தூர்வாரும் பணி செய்வதற்கு 2006–07ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.15,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண்.345 / நாள் : 31.01.2007–ன் படி நிர்வாக ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு அதில் திரு.ஏ.சீனிவாசன், 9, புதிய LIG காலனி அண்ணாநகர் மதுரை–20 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மதிப்பாய்வுக் குழுவில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :168**
**குறிப்பு கொள்ளப்பட்டது.**

**49) ம.பொ.4/ம.எண்.1489/ 06**

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.3ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாயை ஆழப்படுத்துதல் மற்றும் கரை அமைக்கும் பணிக்கு 2006–2007ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.18,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண்.345 / நாள்: 31.01.2007–ன் படி நிர்வாக ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு அதில் திரு.ஏ.சீனிவாசன், 9, புதிய LIG காலனி அண்ணாநகர் மதுரை–20 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.15% குறைத்து கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மதிப்பாய்வுக் குழுவில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :169**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

**50) B 30 /32410 / 07**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட கல்யாண மஉறால், உேறாட்டல்கள், தங்கும் விடுதிகள், திரையரங்குகள், மருத்துவமனைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ள கட்டிடங்களில் சேகரிக்கும் குப்பைகளை அப்புறப்படுத்த ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு லாரி வீதம் அதற்குரிய பணியாளர்கள் உட்பட ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற்று மேற்கண்ட பணியினை மேற்கொள்ளலாம். அதற்கான செலவு தொகையினை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து கட்டணமாக வசூல் செய்து அந்த தொகையிலிருந்து செலவு செய்யலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :170**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

**51) B 30 / 32409 / 07**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் குவிக்கப்பட்டுள்ள கட்டிட இடிபாடுகள் மண்ணை அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. மேற்கண்ட மண்குவியலை அப்புறப்படுத்த ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு லாரி வீதம் பணியாளர்கள் உட்பட ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற்று மேற்கண்ட பணியினை மேற்கொள்ளலாம். அதற்கான செலவு தொகையினை கட்டிடம் கட்டும் உரிமையாளர்களிடமிருந்து கட்டணமாக வசூல் செய்து அந்த தொகையிலிருந்து செலவு செய்யலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :171**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

**52) ம.பொ. 2 / 32474 / 07**

மதுரை மாநகராட்சியில் தற்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கும் 16 நடுநிலைப் பள்ளிகளில் 5165 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இம் மாணவ மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவைப்படும் தளவாடச் சாமான்கள், கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 16 மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை தனியார் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக உயர்த்தும் பொருட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்தில் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்வதற்கும், மேற்கண்ட தொகையை கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :172**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

**53) ம.பொ. 2 / 32475 / 07**

மதுரை மாநகராட்சியில் தற்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கும் 11 மேல்நிலைப் பள்ளிகளில் 12657 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இம் மாணவ மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவைப்படும் தளவாடச் சாமான்கள், கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 11 மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளை தனியார் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக உயர்த்தும் பொருட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்தில் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்வதற்கும், மேற்கண்ட தொகையை கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :173**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 54) ம.பொ. 2 / 32476 / 07

மதுரை மாநகராட்சியில் தற்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கும் 13 உயர்நிலைப் பள்ளிகளில் 2135 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இம் மாணவ மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவைப்படும் தளவாடச் சாமான்கள், கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 13 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை தனியார் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக உயர்த்தும் பொருட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்தில் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்வதற்கும், மேற்கண்ட தொகையை கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :174**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 55) ம.பொ. 2 / 32477 / 07

மதுரை மாநகராட்சியில் தற்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கும் 27 தொடக்கப் பள்ளிகளில் 3599 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இம் மாணவ மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவைப்படும் தளவாடச் சாமான்கள், கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 27 மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளை தனியார் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக உயர்த்தும் பொருட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்தில் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்வதற்கும், மேற்கண்ட தொகையை கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :175**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 56) Jn. S. 1 / 32922 / 06

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரில் உள்ள 208 குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்ய நகர மேம்பாடு திட்டத்தில் (CDP) திட்டம் தயார் செய்து மத்திய மற்றும் மாநில அரசுகளில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றி முடிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக பகுதி - I ல் 21 குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூ. 26.86 கோடிக்கும் பகுதி - II ல் 58 குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூ. 103.58 கோடிக்கும் மத்திய மற்றும் மாநில அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் Roc.No. 29323/2007/IHSDP 2, நாள். 25.06.07 ம் தேதிய சுற்றறிக்கையின் படி தேர்வு செய்யப்படும் குடிசைப் பகுதிகளையும் அதில் பயன்பெறும் பயனாளிகள் பட்டியல் மாமன்றத்தில் ஒப்புதல் பெற்று நிறைவேற்றுவமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 25 குடிசைப்பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, தீர்மானம் எண். 116, நாள். 06.08.07 ல் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. தற்பொழுது இரண்டாவது கட்டமாக 54 குடிசைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட குடிசைப் பகுதிகளில் உள்ள கூரை வீடுகள் / ஓட்டு வீடுகள் / ஆஸ்பெஸ்டாஸ் சீட் வீடுகள் ஆகியவற்றை முழுமையாக அகற்றி புதியதாக 25.40 சதுர மீட்டரில் (273 சதுர அடியில் / ஆர்.சி.சி. கூரை) அமைந்த கட்டிடம் ரூ. 92,000/- மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 50% மத்திய அரசு மானியமும் 20% மாநில அரசு மானியமும் 30% பயனாளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் பங்களிப்பில் செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த சுமார் ரூ. 19.32 கோடிக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ரூ. 19.32 கோடியில் 30% மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது TUFIDCO நிறுவனத்தில் கடன் பெற்று நிறைவேற்றவும், கட்டிடம் கட்டுவதற்காகும் செலவுத் தொகையில் அரசு அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை போக மீதமுள்ள 30% பங்குத் தொகையை சம்பந்தப்பட்ட பயனாளிகள் செலவு செய்து கொள்ளவும், மேலும் ஒவ்வொரு குடிசைப் பகுதிகளில் நடைபெறும் பணிகளை கண்காணிக்க அந்தந்த குடிசைப் பகுதியிலுள்ள பயனாளிகள் பட்டியலிலிருந்து 10 நபர்களை தேர்வு செய்து ஒரு குழு அமைக்கவும், ஒவ்வொரு வார்டில் நடைபெறும் குடிசைப் பகுதிகளை கண்காணிக்க வார்டு அளவில் குழு அமைக்கவும், மண்டலத்தில் நடைபெறும் அனைத்து குடிசைப் பகுதிகளை கண்காணிக்க மண்டல அளவில் குழு அமைக்கவும் மேலும் குடிசைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் மாநகராட்சி செலவில் வழங்கவும் அதற்கான மாதாந்திர பராமரிப்பு கட்டணமாக பயனாளிகளிடமிருந்து ரூ.20/- குடிநீருக்கும் ரூ. 20/- பாதாள சாக்கடை இணைப்பிற்கும் வசூல் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :176**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 57) HF.1 /26016/ 2006

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.13ல் பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.மகாமணி, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக சிவகங்கை நகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்ய கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை பணிமாறுதல் செய்வதற்கு அரசின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 1) மேற்படி ஒருவழி மாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கப்படும்.

2) மேற்படி ஒருவழி மாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண் :177**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 58) Jn.S1/ 29943 / 06

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.251.81 கோடி மத்திய அரசின் (K14012/2/2006 NuRM on 26.4.2007-ல் ஒப்புதல் பெறப்பட்டது. ஏற்கனவே மேற்கண்டவாறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்.81, நாள்: 18.7.2007–ல் மேற்கண்ட தொகைக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒப்புதல் பெற்ற தொகையில் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக கீழ்கண்டவாறு பத்து (10) பகுதிகளாக பிரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலுக்கும், டெண்டர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண். | பகுதி எண். | வேலை விபரம் | தொகை (Rs. in Crores) |
|---|---|---|---|
| 1 | I | மழைநீர் வடிகால் அமைத்தல் (பாகம் 5,6,9,10,11,11a, 12 & 1 பிரதான வாய்க்கால்) | 35.643 |
| 2 | II | மழைநீர் வடிகால் அமைத்தல் (பாகம் 1A, 1B, 1C, 1D, 2,3,4,7.8 & 1 பிரதான வாய்க்கால்) | 47.849 |
| 3 | III | மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் கிருதுமால் வாய்க்கால், அவனியாபுரம் வாய்க்கால், சிந்தாமணி வாய்க்கால் ஆகிய பகுதிகளில் கல்வெட் அமைத்தல் | 51.103 |
| 4 | IV | மழைநீர் வடிகால் அமைத்தல் (பாகம் 13,14,15,16,17,18,19, & 1 பிரதான வாய்க்கால்) | 52.526 |
| 5 | V | மழைநீர் வடிகால் அமைத்தல் (பாகம் 20,25,26,27,28,29 & 1 பிரதான வாய்க்கால்) | 32.406 |
| 6 | VI | மழைநீர் வடிகால் அமைத்தல் (பாகம் 21, 22,23 & 24 பிரதான வாய்க்கால் மற்றும் அனுப்பானடி வாய்க்கால், பனையூர் மற்றும் சொட்டதட்டி வாய்க்கால் ஆகிய பகுதிகளில் கல்வெட் அமைத்தல் | 51.493 |
| 7 | VII | மீனாட்சி அம்மன் கோவில் வடபுறம் வடக்கு சித்திரை வீதியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டும் பணி | 0.133 |
| 8 | VIII | மீனாட்சி அம்மன் கோவில் மேற்கு சித்திரை வீதியில் மழைநீர் வாய்க்கால் கட்டும் பணி | 0.124 |
| 9 | IX | மீனாட்சி அம்மன் கோவில் தெற்கு மற்றும் கிழக்கு சித்திரை வீதியில் பூங்கா பகுதியில் மழைநீர் வாய்க்கால் கட்டும் பணி | 0.240 |
| 10 | X | மீனாட்சி அம்மன் கோவில் கிழக்கு சித்திரை வீதியில் மழைநீர் வாய்க்கால் கட்டும் பணி | 0.210 |
| | | **மொத்தம்** | **271.727 கோடிகள்** |

குறிப்பு : மேற்கண்ட பணிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத் தொகையை மதுரை மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்யலாம்.

**மாமன்ற தீர்மானம் எண் :178**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 59) ம.பொ. 5 /ம.எண்.1852 / 06

மதுரை மாநகராட்சி வார்டு எண்.53ல் அனுப்பானடியில் அமைந்துள்ள காலியிடத்தில் புதிதாக நவீன முறையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆடுவதை செய்யும் இடத்திற்கு (Slaughter House) கட்டிடம் கட்டும் வேலைக்கு 2006–2007ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.75,00,000/- க்கு (ரூபாய். ஏழுபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத் தீர்மானம் எண். 383, நாள் 15.3.2007–ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நகராட்சி நிர்வாக ஆணையத்தில் மேற்படி வேலைக்கு திட்டம் II-ன் கீழ் (Part –II Scheme) நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு அரசு மானியத்தில் பெறப்பட்ட தொகை ரூ.10.00/- லட்சம் போக எஞ்சியுள்ள தொகை ரூ.65.00/- லட்சத்தை டுபிட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று செய்வதற்கு மாமன்றத் தீர்மான எண்.64, நாள்:

**18.7.2007**ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு, டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டன. அதில் M/s. Chennai Abator, Pvt. Limited, Valasaravakkam, Chennai-600087 என்ற நிறுவனம் மேற்படி வேலைக்கு மதிப்பீடு விலை விகிதத்திற்கு 9.47% அதிகமாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில், விலை குறைப்பு பெற கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் அன்னாரிடமிருந்து மேற்படி வேலைக்கு மதிப்பீட்டு வேலை விகிதத்திலிருந்து 9.47% அதிகமாக கொடுத்துள்ளதை 4.95% அதிகமாக குறைத்து செய்து தர சம்மதம் கொடுத்துள்ளதை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில், ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டன. மேற்கண்ட வேலைக்கு முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :179**

**பின்னேற்பு செய்து குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 60) மதி.1 /19393/ 99

மதுரை மாநகராட்சி எல்லையினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தில் கண்டுள்ள நிபந்தனையின்படி, திட்ட வரைவு தயாரிக்கப்படவுள்ளது. ஏற்கனவே மதுரையை சுற்றிலும் உள்ள திருமங்கலம் நகராட்சி ஆறு பேரூராட்சிகள் மற்றும் **21** ஊராட்சிகளை மாநகராட்சியுடன் இணைக்க உத்தேசித்து ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, **18.1.2000**ல் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது உள்ள நிலையில் மாநகராட்சி எல்லையை விரிவுப்படுத்த உரிய விபரங்கள் ஆவணங்கள் தயாரிக்கவும், தலைவர் மற்றும் பொதுமக்கள் கருத்துகளை சேகரித்து திட்ட வரைவு தயாரித்து: சமர்பிக்க ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆலோசகரை (Consultant) நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :180**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

## 61) மதி.1 /32493/ 2007

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், மதுரை நகரை குடிசையில்லாத பகுதியாக மாற்றுவதற்கு அடுக்குமாடி கட்டிடங்கள் கட்ட மாநகராட்சிக்கு சொந்தமான பழத்தோட்ட நிலத்தினை வழங்குமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய செயற்பொறியாளர் ந.க.எண்.உ.பொ(நி) /522/-07 நாள் : **18.9.2007**ல் கோரப்பட்டுள்ளது. மேற்படி இடம் வண்டியூர் கிராமம் (கருப்பாயூரணி) புல எண். **31**/1 விஸ்திரிணம் 8.64 ஏக்கர் பழத்தோட்டம் என வகைப்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை மதுரை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள ஆட்சேபகரமான ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் குடிசைவாசிகளுக்கு மாற்று குடியமர்த்த வேண்டியுள்ளது. எனவே இது போன்ற குடிசைவாசிகளுக்கு இலவசமாக அடுக்குமாடி வீடு கட்டித்தர பிரஸ்தாப பழத்தோட்டம் நிலத்தினை அரசின் ஒப்புதலை பெற்று, குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :181**

**இந்த இடம் வருங்காலத்தில் மாநகராட்சிக்கு தேவைப்படும் என்பதால், இதற்கு பதிலாக வேறுஇடம் தேர்வு செய்ய வேண்டியது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 62) மரு.3 /10196/ 2007

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரம் கொசு ஒழிப்பு பணிக்கு **9.4.2007** முதல் **5.6.2007** வரை **59** நாட்களுக்கு தினக்கூலி ரூ.**92**/- வீதம் மண்டலம் ஒன்றுக்கு **15** தினக்கூலி மஸ்தூர்கள் (4x15=60) **59** நாட்களுக்கு பணி செய்தமைக்கு வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.2,40,120/-க்கும் **7.6.2007** முதல் **3.9.2007** வரையிலான **89** நாட்களுக்கு தினக்கூலி ரூ.**92**/- வீதம் மேற்படி **60** தினக்கூலி மஸ்தூர்கள் பணி செய்தமைக்கான சம்பளத் தொகை ரூ.4,91,250/- வழங்குவதற்கும் **5.9.2007** முதல் **2.12.2007** வரையிலான **89** நாட்களுக்கு மேற்படி **60** தினக்கூலி மஸ்தூர்களை தினக்கூலி ரூபாய். **92**/- வீதம் பணி செய்து வருவதற்கும், அதற்கான சம்பளத் தொகை வழங்கவும், இனி ஒவ்வொரு **89** நாட்களுக்கும் சுகாதார ஆய்வாளர்களே நேரிடையாக வேலை வாய்ப்பு அட்டையை பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தினக்கூலி துப்புரவு ஊழியர்கள் எடுத்து பணி செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :182**

**குறிப்பு கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 19.9.2007**

* * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **செப்டம்பர்** திங்கள் **26-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

### 1) ம.நி.1/13463 / 2007

**மதுரை மாநகராட்சியில் நீதி அலுவலர் மற்றும் தலைவர், மேல்முறையீடு தீர்ப்பாயம் பணியிடத்திற்கு செல்வி. M. பிச்சம்மாள், மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிபதி அவர்களை பணி உயர்வு மூலம் பணியமர்த்தி ஆணையிடப்பட்டுள்ள அரசாணை எண்.420, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்:7.9.2007–னை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.**

குறிப்பு : **அன்னார் 13.9.2007 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.**

**மாமன்ற தீர்மானம் எண் :183**
**பதிவு செய்யப்பட்டது.**

### 2) B.1/32668/2007

01.07.2007 முதல் அகவிலைப்படியினை 35% சதவீதத்திலிருந்து 41% சதவீதமாக உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ள **13.9.2007** தேதிய அரசாணை எண்.**437** நிதி (படிகள்) துறை அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கும் மேற்கண்ட அரசாணையின் பிரகாரம் **01.07.2007** முதல் 6% சதவீதம் அகவிலைப்படி ஊதியத்துடன் சேர்த்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :184**
**பதிவு செய்யப்பட்டது.**

### 3) ம.வ.5/ 32513 / 2007

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான தமுக்கம் கலையரங்கம் எதிரில், இராஜாஜி சிறுவர் பூங்காவில் உள்ள, பூங்கா ஆரியபவான் ஹோட்டல் லைசென்ஸ்தாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேற்படி ஹோட்டல் அருகில் உள்ள திறந்த வெளியில் குடைகள் அமைத்து, சிற்றுண்டி உணவகம் நடத்த வ.உ.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :185**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

### 4) ம.பொ.5 /ம.எண்./1851/06

மதுரை மாநகராட்சி, வார்டு **58–**ல் உள்ள மூலக்கரை மயான வளாகத்தில் நவீன எரியூட்டும் மயானம் (Gasifier Crematorium) அமைக்கும் வேலைக்கு **2006–2007**ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.**96,15,000/-**க்கு (ரூபாய் தொன்னூற்று ஆறு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.**382**/நாள்.**15.3.2007**ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் நகராட்சி நிர்வாக ஆணையத்தில் மேற்படி வேலைக்கு திட்டம் IIன் கீழ் (Part-II scheme) நிர்வாக ஒப்புதலும் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு அரசு மானியத்தில் பெறப்பட்ட தொகை

ரூ.20.00/- லட்சம் போக எஞ்சியுள்ள தொகை ரூ.76.15/- லட்சத்தை TUFIDCO நிறுவனத்திலிருந்து கடன் பெற்று செய்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.63/நாள். 18.7.2007ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு, டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் Jwalaa equipments and consultant, 33, Naickamar Street, Sellur, Madurai-2. என்ற நிறுவனத்தாரின் இவ்வேலைக்கு மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.41% கூடுதலாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து மதிப்பாய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவை வ.உ.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டது.

அன்னாருக்கு முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :186**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

5) **ம.பொ.5 /ம.எண்.626/07-08**

மதுரை மாநகராட்சி, வார்டு 52–ல் உள்ள தெப்பக்குளம் சுற்றியுள்ள தார்சாலையை புதிப்பிக்கும் வேலைக்கு 2007–08ம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.22,50,000,– (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :187**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

6) **ம.பொ.5 /ம.எண்.627/07-08**

மதுரை மாநகராட்சி, வார்டு 52–ல் உள்ள அனுப்பானடி ரயில்வே சந்திப்பிலிருந்து தெப்பக்குளம் சாலை வரை தார்சாலை அமைக்கும் வேலைக்கு 2007–08ம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.22,00,000,– (ரூபாய் இருபத்திரெண்டு லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :188**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **ம.பொ.5 /ம.எண்.421/07-08**

மதுரை மாநகராட்சி, வார்டு 53–ல் உள்ள சுந்தரராஜன் பிள்ளை தெரு, ஆதிமூலம் பிள்ளை தெரு, தரகுபிள்ளை தெரு மற்றும் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் சிமிண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் வேலைக்கு 2007–08ம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :189**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

8) **ம.பொ.5 /ம.எண்.657/07-08**

மதுரை மாநகராட்சி, வார்டு 53–ல் உள்ள அனுப்பானடி மெயின் ரோட்டில் சூசை மைக்கேல் காலனி முதல் ரெயில்வே கேட் வரை உள்ள தார்சாலை சிறப்பு மராமத்து செய்யும் வேலைக்கு 2007–08ம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.18,30,000/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :190**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

9) **Jn.S1/25925/07**

மும்பையில் 27.09.2007 முதல் 30.07.2007 வரை நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு தொடர்பான பொருட்காட்சியில் கலந்து கொள்ளவும், இப்பொருட்காட்சியில் மதுரை மாநகராட்சி சார்பாக அரங்கம் அமைக்கவும் ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.00 லட்சத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டத்தின் நிதியிலிருந்து செலவு செய்யவும், வ.உ.மேயரின் முன் ஒப்புதல் பெற்று முன் பணம் பெறப்பட்டதற்கும் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :191**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 10) ம.பொ.4/ம.எண்.1538/ 06

மதுரை மாநகராட்சி வார்டு–11, ரேஸ்கோர்ஸ் சாலையின் இருபுறமும் நடைமேடை (Acupuncutre cement concrete blocks) அமைக்கும் வேலைக்கு 2006–07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதத்தில் ரூ.24,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு அதில் M/s மேகலா கன்ஸ்ட்ரக்ஸ்ன்ஸ் 580, கற்பக நகர் 12வது தெரு, K.புதூர், மதுரை–7 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கவும், மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு ஏற்கனவே பெறப்பட்ட முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைகயும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :192**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 11) ம.வ.1/ 24688 / 2007

மதுரை மாநகராட்சியில் மாத வாடகை அடிப்படையில் உள்ள கடைகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 92, நாள்: 3.7.2007–ல் லைசென்ஸ் காலம் 9 ஆண்டுகள் பூர்த்தியாகும் கடைகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் துணை ஆணையாளர், கண்காணிப்பு பொறியாளர், முதன்மை கணக்கு அலுவலர், அனைத்து மண்டல உதவி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர் (வருவாய்) ஆகியோர் கொண்ட குழு பரிசீலினை செய்ததில், அங்காடி மதிப்பின் அடிப்படையில் மாநகராட்சி கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது உகந்ததாக அமையாது என்று முடிவு செய்யப்பட்டது. எனவே தற்போது கடைகளுக்கு வசூலிக்கப்பட்டு வரும் மாத வாடகை அடிப்படையில் 1.4.2007 முதல் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகாத மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலைய கடைகள் நீங்கலாக மற்ற கடைகளுக்கு கீழ்கண்டவாறு வாடகை மறு மதிப்பீடு செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

| | | |
|---|---|---|
| மாத வாடகை ரூ.500/- வரை உள்ளவற்றிற்கு | – | 40% உயர்வு |
| மாத வாடகை ரூ.501/- லிருந்து ரூ.3000/- வரைஉள்ளவற்றிற்கு | – | 30% உயர்வு |
| மாத வாடகை ரூ.3001/- ம் அதற்கு மேலும் உள்ளவற்றிற்கு | – | 25% உயர்வு |

**மாமன்ற தீர்மானம் எண் :193**
**மேயர், துணை மேயர் மற்றும் ஆணையாளர் அனைவரும் கலந்துபேசி முடிவு செய்ய வேண்டியது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 12) ஆர்.ஆர்.1/31034/2006

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்டச் சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்கவரி வசூல் செய்து கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.225 / 9.6.2000 மற்றும் அரசாணை எண்.149, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 23.10.2000–ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவுகளின்படி 1.11.2000 முதல் 31.10.2007 முடிய ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% உயர்த்தி சுங்கவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. 1.11.2007 முதல் சுங்கவரி திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

1.11.2007 முதல் உள்வட்ட சுற்றுச்சாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்து வரும் கட்டணத்தில் எத்தனை சதவீதம் உயர்த்தி வசூல் செய்வது என்பதற்கு மாமன்றத்தின் கருத்தினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.
(மாமன்றத்தின் கருத்துருவின் அடிப்படையில் அரசின் ஒப்புதல் பெறப்படும்.)

**குறிப்பு :** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.149, நாள். 23.10.2000 பத்தி 10 (எ)ல் உள்ளபடி 5 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% உயர்வு செய்யும் முறை குறித்து முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், மேற்படி அரசாணை பத்தி 10 (ஜி)ல் கடனுக்காக வசூல் செய்யும் சுங்க கட்டணம் போதுமானதாக இருக்கும் பட்சத்தில் வருடாந்திர உயர்வு 8% விகிதத்தில்

தொடர வேண்டுமா அல்லது குறைத்து நிர்ணயம் செய்ய வேண்டுமா என்பது குறித்தும் முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி அரசாணை பத்தி 10 (கே)ல் ஆறாம் வருடம் முதல் மீதமுள்ள பத்து ஆண்டுகளுக்கு சுங்கவரி வசூல் செய்யப்பட உள்ளதை பத்தி 10 (ஜீ) அடிப்படையில் வெளியீடு (Notification) செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அரசாணை கோப்பில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :194**

**மேயர், துணை மேயர் மற்றும் ஆணையாளர் அனைவரும் கலந்துபேசி முடிவு செய்ய வேண்டியது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : **24.9.2007**

மதுரை மாநகராட்சி

* * * * * * *